
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • ஜனவரி 29, 2022

Weekly E-paper • January 29, 2022

## அண்ணாவின் கொடை!

பேராசிரியர் அ.இராமசாமி

## பேரவையின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

## தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தலையங்கம்

## அத்துமீறும் இலங்கை மவுனத்தில் ஒன்றியம்

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜனவரி 29, 2022 Weekly E-paper ● January 29, 2022


# அண்ணாவின் கொடை!

**பேராசிரியர் அ.இராமசாமி, துணைத்தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்**

“இந்தியை மூன்றாவது மொழியாகக் கற்றுக் கொடுப்பதில் என்ன சிரமம் இருக்கிறது?” என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், அர்ஜுனன் இளையராஜா என்பவர் தொடுத்திருக்கும் பொதுநல வழக்கு விசாரணையின் போது கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

மும்மொழிக் கொள்கை என்ற வகையில் இந்தியைத்தான் திணிக்கிறார்கள். மூன்றாம் மொழியாக இந்தியைப் படிக்க வேண்டிய கட்டாயம் என்ன இருக்கிறது என்று கேட்க வேண்டி இருக்கிறது.




பேராசிரியர் அ.இராமசாமி

இந்தி படித்தால் வேலை வாய்ப்பிற்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறார்கள். ஏற்கெனவே இந்தியைத் தமிழ் நாட்டில் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தி பிரச்சார சபா மூலம் படிக்கிறார்கள், ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கிறவர்கள், கான்வென்ட்டில் படிக்கிறவர்கள் இந்தி படிக்கிறார்கள்.

எனக்குக் கிடைத்தத் தரவுகளின் படி கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி மக்களுக்கு இந்தி தெரியும். இந்த ஒன்றரைக் கோடி மக்களில் எத்தனை பேர் இந்தி மாநிலங்களில் வேலை பார்க்கச் சென்று இருக்கிறார்கள். மிகக் குறைவுதான். அப்படி இந்தி மாநிலங்களுக்குச் செல்பவர்கள் முன்னரே இந்தி படித்து விட்டுப் போகிறார்கள்.

எப்போதுமே அரசியல் வணிகத் தொடர்பு தமிழ்நாட்டிற்கும் வட மாநிலங்களுக்கும் இருக்கிறது. மும்மொழியைப் படித்துவிட்டு யாரும் செல்வதில்லை. போகிறவர்கள் இந்தி படித்துவிட்டு, தெரிந்து கொண்டு போகிறார்கள்.



ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த 40 மாணவர்களும் இந்தி மாநிலங்களுக்குப் போவதில்லை. ஓரிருவர்தான் போவார்கள். எதற்காக மற்ற மாணவர்களை இந்தி கற்க வைத்துத் துன்புறுத்த வேண்டும்? அதற்கான அவசியம் என்ன என்கிற கேள்விதான் நம்முடைய வாதம்.

அடுத்தபடியாக மும்மொழிக் கொள்கையை நம்மை மட்டும்தான் பின்பற்றச் சொல்கிறார்கள். கர்நாடகாவில், ஆந்திராவில், கேரளாவில் மும்மொழிக் கொள்கை இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர, உத்தரப்பிரதேசத்தில் இருக்கிறது பீகாரில் இருக்கிறது என்று சொல்ல மாட்டார்கள். ஏனெனில் அங்கே எல்லாம் ஒரு மொழிக்கொள்கை - இந்தி மட்டும்தான். அங்கு ஆங்கிலம் கூட பள்ளியில் எல்லோரும் படிப்பதில்லை. அவர்கள் இந்தி மட்டும் படித்தால் போதும். ஆனால் நமக்கு அப்படி இல்லை, நாம் தமிழ் மட்டும் படிப்பதில்லை. ஆங்கிலத்தையும் சேர்த்துப் படிக்கிறோம்.

தமிழை மட்டும் படித்தால் போதாது என்பதற்காகத்தான் அண்ணா தமிழையும் ஆங்கிலத்தையும் இருமொழிக் கொள்கையாக அறிவித்தார். இந்த இரு மொழிக் கொள்கை இருப்பதினால்தான், மாணவர்கள் ஆங்கிலத்தைப் படித்ததினால்தான் சிலர் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்று உலகம் முழுவதும் பரவி இருக்கிறார்கள். அறிவியல் தொழில்நுட்பம் போன்ற எல்லாத் துறைகளிலும் தமிழ்நாட்டு மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். அண்ணாவின் இருமொழிக் கொள்கை தந்த வெற்றிதான் இது.

இதை நாம் சொல்ல வேண்டும் என்பதில்லை. பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், இந்தியாவின் துணைப் பிரதமராக இருந்தவருமான திரு எல்.கே.அத்வானி அவர்கள் லக்னோ பல்கலைக்கழகத்தில் பேசும்போது, தென்னிந்தியர்கள் ஆங்கிலம் படிப்பதால் ஐரோப்பா அமெரிக்கா என உலகம் முழுவதும் பரவி இருக்கிறார்கள், நீங்கள் இந்தியை மட்டும் படிப்பதால் இங்கேயே இருக்கிறீர்கள், எனவே நீங்களும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று சொன்னார்.

எனவே அண்ணாவின் இரு மொழிக் கொள்கை என்பது கொள்கை அல்ல, அது தமிழர்களுக்கு அண்ணாவின் கொடை. ●

## “குடியரசு நாள் ஊர்வலத்தில் தமிழ்நாடு ஊர்திகள் புறக்கணிப்பு”

# பேரவையின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

**சென்னை**





**கோவை**






**மதுரை**




**தஞ்சாவூர்**




**ஈரோடு**





## கா.வேழவேந்தன் காலமானார்

சென்னை, மைலாப்பூரில் முன்னாள் தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், சிறந்த மரபுக் கவிஞருமான கா.வேழவேந்தன் அவர்கள் தன் 86ஆம் வயதில் உடல் நலக்குறைவால் காலமானார். அவருக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



சென்னையில் 27-01-2022 அன்று நடைபெற்ற திமுக மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் இல்லத் திருமண நிகழ்வில் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்களுடன் பொதுச் செயலாளர் ர்தோழர் சுப.வீரபாண்டின்.




28-01-2022 அன்று நெய்வேலியில், திராவிடர் கழகப் பெரியாரியல் விளக்கப் பிரச்சாரக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆ.சிங்கராயர் ஆகியோர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

“தமிழும் நானும் மெய்யாய் ‘உடலுயிர் ’ கண்டீர்“ என்றார் புரட்சிக் கவிவேந்தர் பாரதிதாசனார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கம் வைத்துத் தமிழாட்சி செய்தவர்கள் தமிழர்கள். தமிழ் இம்மண்ணின் நிலை மொழியேயன்றி, வந்தேறிய மொழியன்று.

குடியரசு நாளன்று சென்னை ரிசர்வ் வங்கியின் அதிகாரிகள் சிலர், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் போது எழுந்து நிற்கவில்லை. தமிழை அவமானப்படுத்தும் விதமாக, ஏளனமாக அமர்ந்து இருந்திருக்கிறார்கள்.

பத்திரிகையாளர்கள் அதைச் சுட்டிக்காட்டிய போது, அப்படியெல்லாம் எழுந்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அரசாணையோ, நீதிமன்றமோ அப்படி ஏதும் சொல்லவில்லை என்றும் ஏகடியம் பேசியிருக்கிறார்கள் அவர்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் பாட வேண்டும் என்று அரசுப் பொதுத் துறையின் சார்பில் 23-11-1970 அன்று அரசாணையாக வெளியிட்டார் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள்.

சென்ற ஆண்டு 17-12-2021 அன்று தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை மாநிலப் பாடலாக அறிவித்ததோடு, அரசு நிகழ்வுகளில் அப்பாடல் பாடும்போது கட்டாயம் எழுந்து நிற்க வேண்டும் - மாற்றுத்திறனாளிகள் தவிர என்ற அரசாணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறப்பித்திருந்தார்.

நாடாளுமன்ற தி.மு.கழக உறுப்பினர் கனிமொழி சொன்னது போல, ஒரு மாநிலத்தின் அரசாணையைக் கூடத் தெரிந்து கொள்ளாமலா ரிசர்வ் வங்கி அதிகாரிகள் இருக்கிறார்கள்?

தமிழ் நாட்டில், தமிழ் மண்ணில் வேலை பார்க்கும் ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தமிழைப் பழிக்கிறார்கள் என்பது ஒட்டுமொத்தத் தமிழர்களையும் அவமதிக்கிறார்கள் என்று பொருள்.

இப்பொழுது அதற்காக வருத்தம் தெரிவிப்பதைப் போல பாவனை செய்கிறார்கள். இந்த இடத்தில் சாவர்க்கரை நினைக்கவேண்டி இருக்கிறது.

“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்“, தமிழைப் பழித்தால் தாய் தடுத்தாலும் விட மாட்டோம் என்று எச்சரிக்கிறார் எங்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# அத்துமீறும் இலங்கை மவுனத்தில் ஒன்றியம்

**மதிவாணன்**

தமிழ்நாடு மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளில் 105 படகுகளை இலங்கை அரசு ஏலமிடப் போவதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இப்படகுகள் பாரம்பரியப் பகுதிகளில் மீன் பிடியில் ஈடுபட்டு இருந்த மீனவர்களிடம் இருந்து கடந்த 2015க்கும் 2019க்கும் இடைப்பட்டக் காலத்தில் கைப்பற்றப்பட்டவை என்பது குறிப்பிடதக்கது.

மீனவர்களின் வாழ்வாதாரமே படகுகள்தான் என்று இருக்கும் நிலையில், அவர்களின் படகுகளை ஏலம் விடுவது என்பதை, அவர்களின் வாழ்வை முழுமையாக முடக்கும் செயலாகவே பார்க்க வேண்டும்.

வழக்கமாக மீனவர்களைக் கைது செய்வது என்று இருந்த நிலையில், படகுகளைப் பறிமுதல் செய்வதற்குத் தான்தான் அறிவுறுத்தியதாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் சுப்பிரமணியசாமி பேட்டி கொடுத்தது நினைவு கூரத்தக்கது. இங்குதான் தமிழ்நாட்டு மீனவர்களின் சிக்கல் அடுத்த கட்டத்திற்குப் போனது. மீனவர்கள் கைது மட்டும் அல்லாமல், படகுகளைத் திருப்பித் தராமல் பறிமுதல் செய்யத் தொடங்கியது இலங்கை அரசு. அதன்பின் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகே திருப்பிக் கொடுத்தது.

தற்போது நிலைமை இன்னும் மோசமாகப் போகிறது. ஆம், தற்போது தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டப் படகுகளை, தங்கள் நாட்டுப் படகுகளைப் போல இலங்கை அரசு ஏலமிட நாள் குறித்து இருக்கின்றது. பிப்ரவரி 7ஆம் நாள் தொடங்கி ஏலம் விடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 8ஆம் நாள் யாழ்ப்பாணம் காரைநகரில் 65 படகுகள், அதே நாளில் காங்கேசன் துறையில் 5 படகுகள், பிப்ரவரி 9ஆம் நாள் கிராஞ்சியில் 24 படகுகள், பிப்ரவரி 10ஆம் நாள் தலைமன்னாரில் 9 படகுகள், பிப்ரவரி 11ஆம் நாள் கற்பிட்டியில் 2 படகுகள் என ஏலம் விட நாள்கள் குறிக்கப்பட்டுள்ளன.

வெளியுறவுத் துறையைக் கையில் வைத்திருக்கும் ஒன்றிய அரசு, ஒவ்வொரு முறையும் மாநில அரசு கடிதம் எழுதும் வரை மௌனமாகவே இருப்பது வாடிக்கையான கதை.

இம்முறையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசிற்குக் கடிதம் எழுதி உள்ளார். அதில் மீன்பிடித்தல் குறித்த கூட்டுப் பணிக்குழுப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் இந்த நடவடிக்கை, மீனவர்களிடம் அதிர்ச்சியையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் முதலமைச்சர் தளபதி அவர்கள், இலங்கையில் வெவ்வேறு துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள 125 படகுகளை மீட்க, இலங்கைக்குத் தொழில்நுட்பக் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று ஒன்றியத்தின் வெளியுறவுத் துறையைக் கேட்டுக்கொண்டு, செல்லவேண்டிய அதிகாரிகள் மற்றும் கொள்முதலாளர்கள் தகவல்களை ஒன்றியத்திடம் தெரிவித்து, படகுகளை மீட்க நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், இலங்கை அரசு படகுகளை ஏலம் விடுவதற்கு விளம்பரம் செய்துள்ளதைச் சுட்டிக்காட்டி உள்ளார்.

இலங்கையில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களின் சட்ட நடைமுறைவழியே விடுவிக்கப்பட்டுள்ளப் படகுகள் தமிழ்நாடு மீனவர்களுக்கே சொந்தமானவை. இலங்கை அரசுக்கு ஏலம் விட உரிமை இல்லை. எனவே உயர் அதிகாரிகள் மூலம் இலங்கை அரசுக்கு இந்திய அரசு மறுப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் முதலமைச்சர்.



2018ஆம் ஆண்டுக்குப் பிறகு கைப்பற்றிய 75 படகுகள் மற்றும் மீன்பிடி பொருட்களை மீட்டுத் தருவதை உறுதி செய்யுமாறும் வலியுறுத்தி உள்ளார்.

ஒரு மாநில அரசு செய்ய வேண்டிய வேலைகளுக்கு அதிகமாகவே தமிழ்நாடு மாநில அரசு செய்து வருவதை, இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் இருந்தே அறியலாம். அதுபோல விரைந்து செயல்பட வேண்டிய இடத்தில் ஒன்றிய அரசு இருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இலங்கை அரசு உணவுப் பொருள் வாங்குவதற்குக் கூட பணம் இல்லாத நிலையில், பொருட்களின் விலை ஏற்றம் அதிகரித்து இருப்பதை அங்கே பார்க்க முடிகின்றது. எரிபொருள்களின் விலையும் அது போலவே இருக்கின்றது. இலங்கை அரசு கிட்டதட்ட திவால் ஆகும் நிலையில், இந்திய ஒன்றிய அரசு 18,090 கோடி ரூபாய் கடன் உதவியை அறிவித்துள்ளது. இந்நிலையில் கூட இலங்கை, இந்தியர்களை குறிப்பாக தமிழ்நாட்டினரை எவ்வாறு பார்க்கின்றது என்பது குறித்த அக்கறையில்லாமல் ஒன்றிய அரசு இருப்பது வேதனை அளிக்கின்றது. இந்திய ஒன்றிய அரசு உதவி செய்யும் நிலையில் மீனவர்கள் பிரச்சனைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வர சில நிபந்தனைகள விதிக்கலாம். வெளியுறவுத் துறை அதிகாரிகள் மூலம் பேசிப் பெற்றுத் தரவேண்டிய நியாயமான உரிமைகள் குறித்து கூட கவனம் செலுத்தாமல் இருக்கிறது ஒன்றிய அரசு. இலங்கை நம் கைகளை எதிர்பார்த்து இருக்கும் வேளையில் கூட, இந்நாட்டுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்பது கவனத்திற்கு உரியது. ஒன்றிய வெளியுறவுத் துறை, மீன்வளத்துறை இரண்டும் தமிழ்நாடு அரசுடன் இணைந்து, உரிய இடத்தில் உரிய காலத்தில் மீனவர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்.

இராமேசுவரம் மீனவர்கள் தங்களின் குடியுரிமைக்கான அனைத்து ஆவணங்களையும் அரசிடம் திருப்பிக் கொடுக்க இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். தங்களின் சொல்லொணாத் துன்பத்தை மக்கள் இவ்வாறு வெளிப்படுத்தி விட்டனர்.

இந்திய ஒன்றியம் தம் எல்லைக்கு உட்பட்ட மக்களின் சுயமரியாதையு டன் கூடிய வாழ்வையும், பாரம்பரிய மீன்பிடிப் பகுதியின் உரிமையையும் உறுதி செய்வது, அதன் கடமை ஆகும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian